**Embassy of the United States of America**
**Colombo**
**PRESS RELEASE**
**Public Affairs Section**
**Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070**
**Email: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov**

**ஊடக அறிக்கை இல. 20180904**

**அமெரிக்கன் கோர்னர் அங்குரார்ப்பணத்தின் நிமித்தம் மாத்தறை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்துள்ள அமெரிக்கத் தூதரகம்**

**மாத்தறை, செப்டெம்பர் 4:** மாத்தறையில் புதிய அமெரிக்கன் கோர்னர் (American Corner) ஒன்றைத் திறப்பது தொடர்பில் அமெரிக்கத் தூதரகத்துக்கும், மாத்தறை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துக்கும் இடையில் ஓகஸ்ட் 30ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்கத் தூதரகத்தின் பதில் பொது அலுவல்கள் அதிகாரி நேன்ஸி வென்ஹோர்ன் மற்றும் சம்மேளத்தின் தலைவர் மேத்தா விதானகமாச்சி ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இல. 149, ஹக்மன வீதி, மாத்தறை என்ற முகவரியில் உள்ள மாத்தறை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன கட்டடத்தின் கீழ்மாடியில் அமைந்துள்ள அமெரிக்கன் கோர்னர், தென்மாகாணத்தில் உள்ளவர்களுக்கு இலவச திட்டங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்கும். ஆங்கில வகுப்புக்கள், குறியீட்டு முறை மற்றும் கணனி திறன், தலைமைத்துவம் மற்றும் பொது பேச்சுப் பயிற்சிகள், பல்வேறான படங்களை திரையிடுதல் மற்றும் கலாசார சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இதன் செயற்றிட்டங்கள் அமைந்திருக்கும்.

“தென் மாகாண மக்களுடன் எமது உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கான அமெரிக்க தூதரகத்தின் உறுதிப்பாட்டை இந்தப் புதிய அமெரிக்கன் கோர்னர் பிரதிநிதித்துவப்படுத்துகிறது,” என்று வென்ஹோர்ன் தெரிவித்தார். “எமது இலவச திட்டங்கள் இந்த பிராந்தியத்தில் பொருளாதார வாய்ப்புக்களை விஸ்தரிப்பதுடன், இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளையும் வலுப்படுத்துத்தும்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறுபட்ட பின்னணிகளைச் சேர்ந்த அதேபோல் வெவ்வேறு வயதுடைய மக்களை கவர்ந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் மையத்தின் (iHub) 2018 மார்ச் மாத அங்குரார்ப்பண வெற்றியின் தொடர்ச்சியாகவே அமெரிக்கன் கோனரின் பிரவேசமும் அமைந்துள்ளது. தற்போதைய நிகழ்ச்சித்திட்டங்களானது பொதுப் பேச்சு மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. எதிர்வரும் மாதங்களில் புதிய அமெரிக்கன் கோர்னர் திறக்கப்படும்வரை iHub தொடர்ந்தும் செயற்படும்.